னைக்கொண்டு பரிசுத்தராயிருந்து அந்தச் சரித்திரத்தைப் படித்தவர்களுக்கும் கேட்டவர்களுக்கும் பெருமாள் அஷ்டஐசுவரியமும் ஆயுராரோக்கியம்கொடுத்து இரட்சித்தருளுவார். அவர்களுக்கு யாகாதிகிருத்தியங்கள் பண்ணின பலனுங் கிடைக்கும். மேலும், இந்தச் சரித்திரத்தை விஷ்ணுஸ்தலங்களிலாவது, புண்ணிய தீர்த்தங்களிலாவது படிப்பார்களாகில் அவர்களுக்குச் சகலபாக்கியங்களு முண்டாம். இந்தச் சரித்திரத்தைப் பக்தியில்லாதவனிடத்திலும், தெய்வநிந்தை பண்ணுகிறவனிடத்திலும், சோம்பலாய்க் கேட்கிறவனிடத்திலும், ஆசாரயீனனிடத்திலும் படிக்கப்போகாது. ஒருவேளை பொருள் சம்பாதிக்கிற நிமித்தம் படித்தபோதிலும் அவனுக்குப் பாவமே அல்லது புண்ணியமில்லை. இந்தக் கதையைக் காமக்குரோதமில்லாத சாந்தசீலரிடத்திலும், சிரத்தைபக்தி யுள்ளவரிடத்திலும் கேட்கவேண்டியது. அப்படிப்பட்டவர்களுக்கே சொல்லவும் வேண்டியது. இந்தப்பிரகாரம் படிப்பவர்களும் சித்தபுத்தியுடையவர்களா யிருப்பார்களாகில் அவர்களுக்குச் சகல சஞ்சிதவினைகளும் விடுபட்டுப்போய் மோட்ச சம்பத்துண்டாகும். அல்லாமலும் இந்தச் சரித்திரத்தைப் பிராமணர்கள் கேட்டால் எக்கியஞ்செய்த பலனைப் பெறுவார்கள். க்ஷத்திரியர்கள் கேட்டால் இராஜரீகத்தைப் பெறுவார்கள். வைசியர்கள் கேட்டால் தேவ பக்தியைப் பெறுவார்கள். சண்டைக்குப்போகிறவன் கேட்டால் செயத்தைப் பொருந்துவான். கர்ப்பவதியான பெண்கள்கேட்டால் நல்லபுத்திரனைப்பெறுவாள். இந்தச் சரித்திரத்தை வைத்திருக்கிறவன் சித்தசுத்தியும் பக்தியும் புத்தியும் வித்தையும் சாந்தமும் இல்லாதவனா யிருந்தாலும் இந்த மகிமையினால் அவன் வீடு அளகாபுரியைப்போலவும், சுவர்க்கலோகம்போலவும் பிரகாசிக்கும். அவன் மறுபிறவியில் புண்ணிய ஜன்மத்தைப்பெற்று ஸ்ரீரங்கநாயகருடைய கிருபாகடாட்சத்தினால் சகல ஐசுவரியமும்பெற்றுப் பரமபாகவதனாக ஸ்ரீவைகுந்தத்தைப் பெறுவார்களென்றறிக.

ஸ்ரீரங்கமகத்துவம் முற்றிற்று.